*செய்தி வெளியீடு எண் : 46* *நாள் :29.10.2019*

**தேனி மாவட்டம்**
**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில்**
**மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-**
*******

*தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக தேனி மாவட்டத்தில் மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் 05.11.2019 அன்று காலை 8.00 மணி முதல் நடைபெறவுள்ளது*

*தேனி மாவட்ட விளையாட்டு அரங்கில் தடகளம், நீச்சல், கூடைப்பந்து மற்றும் இறகுப்பந்து போட்டிகள் இருபாலருக்கும் மட்டும் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் பள்ளி / கல்லூரி மாணவ / மாணவியர்கள், வீரர் / வீராங்கனைகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொள்ளலாம். போட்டிகளில் கலந்து கொள்ள வயது வரம்பில்லை. வெற்றி பெறும் வீரர் / வீராங்கனைகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.*

*ஆண்கள் - 100மீ, 200மீ, 400மீ, 1,500மீ, நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், தட்டு எறிதல், பெண்கள் - 100மீ, 200மீ, 400மீ, 800மீ, நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், தட்டு எறிதல் தடகள போட்டிகளும், 50 மீட்டர், 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர்,* Free Style, *50 மீட்டர்* Back Stroke, *50 மீட்டர்* Breast stroke, *50 மீட்டர்* Butterfly stroke and *200 மீட்டர்* Individual Medley *ஆண் மற்றும் பெண்களுக்கான நீச்சல் போட்டிகளும், கூடைப்பந்து மற்றும் இறகுப்பந்து இருபாலருக்கும் குழு போட்டிகளும் நடைபெறவுள்ளது.*

*05.11.2019 அன்று காலை 8.30 மணிக்கு பின்னர் வரும் அணி வீரர் / வீராங்கனைகள் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே, மாவட்டத்தில் உள்ள பள்ளி / கல்லூரி மாணவ / மாணவியர்கள், வீரர் / வீராங்கனைகள் மற்றும் பொதுமக்கள் மாதாந்திர போட்டிகளில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***